




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.12.2025) எழிலகத்தில் செயல்பட்டு வரும் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில், மிகப்பெரிய எல்.ஈ.டி திரைகளின் மூலம் காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் நகர்வு, அதிக மழை பதிவு விவரங்கள், மழை பெய்யும் பகுதிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, வருவாய் நிருவாக ஆணையர்/ கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எம்.சாய்குமார், சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பேரிடர் மேலாண்மை ஆணையர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## உள்ளாட்சிப் பொறுப்புகளை ஏற்றுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான அறிமுக விழா:

# உங்களுக்காக மற்றவர்கள் குரல் கொடுத்த காலம் போய், மாற்றுத்திறனாளிகள் குரல் கொடுக்கக்கூடிய காலம் இது!

## சென்னையில் நடைபெற்ற உலக மாற்றுத்திறனாளிகள் விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை!

**சென்னை,டிச.4-**

**சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், உலக மாற்றுத்திறனாளிகள் தினமான நேற்று நடைபெற்ற உள்ளாட்சி பொறுப்புகளை ஏற்றுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான அறிமுக விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு வரவேற்புரையாற்றினார்.**

**அப்போது அவர் மாற்றுத்திறனாளிகளுக்காக,மற்றவர்கள் குரல் கொடுக்கக்கூடிய அந்த காலம் போய், இன்றைக்கு நீங்கள் மற்றவர்களுக்காகக் குரல் கொடுக்கக்கூடிய காலம் வந்திருக்கிறது. அதை ஏற்படுத்திக் கொடுத்தவர், அந்தச் சாதனையை நிகழ்த்திக் காட்டிய பெருமைக் குரியவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்" என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

லில் இங்கு வருகை தந்திருக்கக்கூடிய அத்தனை மாற்றுத் திறனாளி சகோதர சகோதரிகளுக்கும், மாற்றுத்திறனாளி நாள் நல்வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் வரவேற்புரை ஆற்ற வாய்ப்பளித்த முதலமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நம்முடைய முதலமைச்சர்

நான் சட்டமன்ற உறுப்பினராக முதன் முறையாகத் தேர்வு செய்யப்பட்டு, சட்டமன்றத்தில், என்னுடைய கன்னிப் பேச்சு, முதல் பேச்சில் முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை வைத்தேன். உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு நியமனப் பதவியை வழங்க வேண்டும் என்பதுதான் அந்தக் கோரிக்கை. இன்றைக்கு அந்தக் கோரிக்கைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு வடிவம் தந்திருக்கிறார்கள், அதை நிறைவேற்றியும் கொடுத்திருக்கிறார்கள்.

அந்தக் கோரிக்கை மட்டுமல்ல, அத்துடன் சேர்ந்து இன்னொரு கோரிக்கையையும் வைத்தேன். மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டத்தின்படி மாற்றுத்திறனாளிகள் நல ஆணையத்திற்கு, தனியாக ஆணையரை நியமிக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்திருந்தேன். அதையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே எப்பொழுதுமே மாற்றுத்திறனாளிகளுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுபவராக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

### முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்

இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், மாற்றுத்திறனாளிகள் என்ற சொல்லை அறிமுகம் செய்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். அது மட்டுமல்ல, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை என்ற ஒரு தனித்துறையை உருவாக்கி, அது எப்பொழுதுமே முதலமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதைச் செயல்படுத்தியவர் கலைஞர் அவர்கள். மாற்றுத்திறனாளிகளின் நலம் குறித்து எப்பொழுதுமே சிந்தித்துச் செயல்பட்டவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

அதற்கு ஒரு சிறந்த உதாரணம். கலைஞர் அவர்கள் எழுதிய 'நெஞ்சுக்கு நீதி' முதல் பாகத்தை மாற்றுத்திறனாளிகளை வைத்துத்தான் கலைஞர் அவர்கள் முதன்முதலில் வெளியிட்டார். அந்த நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை ஏற்றிருந்தவர் தமிழ்நாடு விழியிழந்தோர் சங்கத் தலைவர் ஆசீர் நல்லதம்பி அவர்கள். நூலை வெளியிட்டவர் தொழுநோயாளிகள் மறுவாழ்வுச் சங்கப் பொதுச்செயலாளர் கவிஞர் முகமது அலி அவர்கள். முதல் நூலைப் பெற்றுக் கொண்டவர் மாற்றுத்திறனாளிப் பெண் சாந்தகுமாரி அவர்கள். இன்றைக்கு விழிப்புணர்வு ஏற்பட்டு, நிறைய பேர் மாற்றுத்திறனாளியின் உரிமைக்காகப் பேசலாம். ஆனால், 50 ஆண்டுகளுக்கு முன்பே முழுக்க முழுக்க மாற்றுத்திறனாளிகளின் நலனை யோசித்து, அந்த நூலை வெளியிட்டவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அந்த வகையில்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் இன்றைக்குச் செயல்பட்டு வருகிறார்கள்.





### அன்புத் திருவிழா

முந்தைய 10 ஆண்டு கால ஆட்சியில் இதே வள்ளுவர் கோட்டம் எந்தவிதப் பராமரிப்பும் இன்றி இருந்தது என்பது உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். நம்முடைய ஆட்சி அமைந்த பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் இந்த வள்ளுவர் கோட்டத்தைப் புனரமைப்பு செய்தார்கள். அப்படிப் புதுப்பிக்கப்பட்ட இந்த வள்ளுவர் கோட்டத்தில் நடந்த முதல் நிகழ்ச்சியே நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு மாற்றுத்திறனாளி நடத்திய ஒரு பாராட்டு விழா தான். நாங்கள் சென்ற மாதம் இதே வள்ளுவர் கோட்டத்தில் அறிவுத் திருவிழாவை நடத்தினோம். இன்றைக்கு நம்முடைய அரசு உங்களுக்கு அன்புத் திருவிழாவை, பாசத் திருவிழாவை இன்று நடத்திக்கொண்டு இருக்கிறது.



> **இனி உங்களுடைய கோரிக்கைகளை, உங்களுடைய தேவைகளை, நீங்கள் மற்றவர்கள் மூலமாக கேட்க வேண்டிய அவசியம் இல்லை. ஒவ்வொரு உள்ளாட்சிக் கூட்டத்திலும் நீங்களே உங்களுடைய கோரிக்கையை, உங்களுடைய குரலை எழுப்பி உங்களுடைய தேவைகளை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். மற்றவர்கள் உங்களுக்காகக் குரல் கொடுக்கக் கூடிய அந்தக் காலம் போய், இன்றைக்கு நீங்கள் மற்றவர் களுக்காகக் குரல் கொடுக் கக்கூடிய காலம் வந்திருக்கிறது. அதை ஏற்படுத்திக் கொடுத்தவர், அந்தச் சாதனையை நிகழ்த்திக் காட்டிய பெருமைக் குரியவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.**

உலகத்திலே எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகள் மக்கள் பிரதிநிதிகளாக இன்றைக்கு நியமிக்கப்பட்டு இருக்கின்றார்கள். இனி உங்களுடைய கோரிக்கைகளை, உங்களுடைய தேவைகளை, நீங்கள் மற்றவர்கள் மூலமாக கேட்க வேண்டிய அவசியம் இல்லை. ஒவ்வொரு உள்ளாட்சிக் கூட்டத்திலும் நீங்களே உங்களுடைய கோரிக்கையை, உங்களுடைய குரலை எழுப்பி உங்களுடைய தேவைகளை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். மற்றவர்கள் உங்களுக்காகக் குரல் கொடுக்கக்கூடிய அந்தக் காலம் போய், இன்றைக்கு நீங்கள் மற்றவர்களுக்காகக் குரல் கொடுக்கக்கூடிய காலம் வந்திருக்கிறது. அதை ஏற்படுத்திக் கொடுத்தவர், அந்தச் சாதனையை நிகழ்த்திக் காட்டிய பெருமைக்குரியவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

### விளையாட்டு அரங்குகள்

மாற்றுத்திறனாளிகளுக்கு அனைத்து வகையிலும் சிந்தித்துச் செயல்படக்கூடிய அரசாக நம்முடைய திராவிட மாடல் அரசு இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மெரினா கடற்கரையாக இருக்கட்டும், பெசன்ட் நகர் கடற்கரையாக இருக்கட்டும், அங்கெல்லாம் மாற்றுத்திறனாளிகள் கடல் அலையை ரசிப்பதற்காகச் சிறப்புப் பாதையை ஏற்படுத்திக் கொடுத்தவர்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

அதேபோல விளையாட்டுத் துறையை எடுத்துக்கொண்டீர்கள் என்றால், மாற்றுத்திறன் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளை இன்றைக்குப் பல்வேறு வகையில் இந்த அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. பல்வேறு மாவட்டங்களிலும், பாரா ஸ்போர்ட்ஸ் அரீனா எனப்படுகின்ற மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்யேக விளையாட்டு அரங்குகளை அமைத்துக் கொடுத்திருக்கிறோம்.

இன்றைக்குத் தமிழ்நாடு மாற்றுத்திறன் விளையாட்டு வீரர்கள் விளையாட்டில் பல்வேறு சாதனைகளைத் தொடர்ந்து படைத்து வருகிறார்கள். தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்காக மாற்றுத்திறன் வீரர்களுக்குத் தொடர்ந்து நிதி உதவியையும், ஊக்கத்தொகையையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார். அதன் விளைவாக மாற்றுத்திறன் வீரர்கள் இன்றைக்கு சர்வதேச அளவில் பல்வேறு பதக்கங்களைக் குவித்துச் சாதனை படைத்து நம்முடைய தமிழ்நாட்டுக்கும், இந்தியாவுக்கும் பெருமை தேடி தந்துகொண்டு இருக்கிறீர்கள். அப்படிச் சாதனை படைத்த 5 மாற்றுத்திறன் வீரர்களுக்கு, வீராங்கனைகளுக்கு நம்முடைய மாநிலத்தில் 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ், முதன்முறையாக அரசுப் பணியை நம்முடைய திராவிட மாடல் அரசு முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள்.

### அரசு வேலைவாய்ப்பு

இந்த முறை முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு ஒரு இலக்கு கொடுத்திருக்கிறார். சென்ற வருடம் 5 மாற்றுத்திறன் வீரர்களுக்குக் கொடுத்தோம், இந்த ஆண்டு 25 மாற்றுத்திறன் வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு உத்தரவு செய்திருக்கிறார்.

இப்படி எல்லா வகையிலும் மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காக உழைத்துக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களுக்கு நீங்கள் அனைவரும் எப்பொழுதுமே பக்கபலமாக இருக்க வேண்டும் என்று உங்களை எல்லாம் நான் அன்போடு, உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றுள்ள நம்முடைய முதலமைச்சர் அவர்களை வருக, வருக என வரவேற்கின்றேன். அமைச்சர் பெருமக்கள் அண்ணன் கே.நேரு அவர்கள், அக்கா கீதா ஜீவன் அவர்கள், டி.ஆர்.பி. ராஜா அவர்கள், அண்ணன் ராஜகண்ணப்பன் அவர்கள், அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்களையும் வருக, வருக என வரவேற்கின்றேன்.

சென்னை பெருநகர மாநகர மேயர் சகோதரி பிரியா ராஜன் அவர்களை வரவேற்கின்றேன். சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் மருத்துவர் எழிலன் உள்ளிட்ட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் வருக, வருக என வரவேற்கின்றேன். பெருநகர சென்னை மாநகராட்சியின் துணை மேயர் அண்ணன் மகேஷ் குமார் உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளையும் வருக, வருக என வரவேற்கிறேன். தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முருகானந்தம் ஐ.ஏ.எஸ். உள்ளிட்ட அனைத்து அரசு அதிகாரிகளையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

மாற்றுத்திறனாளிகள் நலவாரியத்தின் உறுப்பினர் சகோதரர் தீபக் நாதன் அவர்களையும், கழக மாற்றுத்திறனாளிகள் அணித் தலைவர் அண்ணன் தங்கம் அவர்களையும், இங்கே திரளாக வந்திருக்கக் கூடிய மாற்றுத்திறனாளித் தோழர்கள் அத்தனை பேரையும், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டிருக்குக் கூடிய ரோகிணி அவர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களையும், இந்த அரங்கம் முழுவதும் நிறைந்திருக்கக்கூடிய அத்தனை பேரையும் மீண்டும் வருக, வருக என வரவேற்று மாற்றுத்திறனாளிகளுடைய உரிமைகள் வெல்லட்டும்!

முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.